# பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்
முனைவர் பி. தமிழகனார்

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

முதுமுனைவர்
**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்
**முனைவர் பி. தமிழகனார்**

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | குறளாய்வு |
| முதற் பதிப்பு | மார்ச்சு - 2019 |
| பக்கம் | 28 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 500 |
| விலை | உருவா : 20/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |
| வெளியீடு<br>&<br>கிடைக்குமிடம் | ♦ **திருவள்ளுவர் நிலையம்**<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006.<br>94431 30603 |
| | ♦ 2, பிச்சையம்மாள் நகர்<br>காசாமலை, திருச்சிராப்பள்ளி - 620023<br>9940704702 |


❖❖❖

# வியப்பினும் வியப்பு

திருச்சிராப்பள்ளி ஊரக முத்தமிழ் மன்ற மேனாள் தலைவர், பொறிஞர் **வேதையனார்**. அவர் மகளார் திருமணம், **திருவண்ணாமலையில்** உறவர் பொறிஞர் திரு. த. சுப்பிரமணியனார் குடும்பத்தில். திருமணம் நிகழ்த்துபவன் யான். மண்டபம் நிரம்பி வழிந்தது. மேடையில் மணமக்களுக்கு இருபாலும் ஆறு ஆறாகப் பன்னிரண்டு நாற்காலிகள். மணவிழாத் தொடங்கியது. நான் கீழே நாற்காலியில் அமர்ந்திருந்தேன். **அமைச்சர், சட்டமன்ற நாடாளுமன்ற** உறுப்பினர் என ஒரு கூட்டம் உள்ளே நுழைந்தது. அவர்களை மேலே வரச் சொன்னார். திரு. சுப்பிரமணியனார். பன்னிரு நாற்காலிகளும் நிரம்பின. யான் திகைப்புற்றேன். "எப்படி இத்திரளின் இடையே திருமணம் நடத்துவது! ஒவ்வொருவர் நிலையும் என்னவோ" என்று எண்ணும்போது, ஒவ்வொருவருக்கும் **ஒரு பொன்னாடை இரண்டு மூன்று மணித்துளிகள் போர்த்தினார். பெருமக்களை மணமேடைக்கு முன்னே உள்ள நாற்காலிகளில் அமரச் சென்னார் ; மணவிழாவைத் திரு. இளங்குமரனார் நடத்துவார் என்றார்.**

மணமேடை ஏறினேன் . இன்றியமையா மூவர் நால்வர் மகளிர் ஆடவர் மட்டுமே மேடையில் இருந்தனர். சரசர என மணமாலை விளக்கு ஒலிவாங்கி என வந்தன. **வியப்பானால் வியப்பு** ; ஓர் ஒலி, ஓர் ஓசை இல்லை ; வழக்கப்படி 20 மணித்துளிகள் மங்கல விழாவை நிகழ்த்தி , மலர் முன்னே செல்ல, மணமக்கள் தொடுத்துச் செல்ல, அவையோர் மலர் தூவ, மணமக்கள் மீள மேடைக்கு வர 10 மணித்துளிகள், ஆக, அருமையான மணம் அரைமணிப் போதில் முடிந்தது;

அப்பெருமகனார், 01.02.2019 ஆம் நாள் ஊரகத்தில், **வேதையனார்** மகனார் திருமணத்திற்கு வந்திருந்தார். திருமணம் சிறப்பாக நிறைவேறியது, மேடை ஏறி எனக்குப் பொன்னாடை போர்த்தி , ஒரு பத்தாயிரம் வழங்கி, "உங்கள் தொண்டுக்கு ஆகட்டும்" என்றார் . என்தொண்டு தமிழ்த்தொண்டு. அவற்றுள் ஒன்று **தமிழ் நூல் வெளியீட்டுத்தொண்டு.** அன்று காலையில், முனைவர் திரு.பி. தமிழகனாரிடம் அச்சிடத் தந்த **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"** என்னும் நூல் அச்சுச் செலவுக்கு ஆகும் என்று கூறி எழுத்துப்படி விடுப்பதாகக் கூறினேன். ஆதலால், இந்நூல் அச்சீட்டு வரவு, **திருவண்ணாமலை திருமிகு சுப்பிரமணியனார் கொடை வரவேயாம்** என்று நன்று கூறி அமைகிறேன்.

திருவள்ளுவர் நிலையம்,
7, இராமன் தெரு,
திருநகர், மதுரை – 6.

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

# இச்சுவடியின் வருநிலை

04.01.2019 ஆம் நாள் **தினமணி ஆசிரியப் பெருந்தகை-மதுரை** நிகழ்ச்சிக்கு வந்த - வைத்திய நாதனார் திருநகர் எம் இல்லம் எய்தினார்.

சென்னையில் நிகழும் புத்தகத் திருவிழாவில் எம், **செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியத்தை,** அறவேந்தர் **அரங்க மகாதேவன்** வெளியிட, **வைத்திய நாதனார்** முதற்படி பெறுபவர் ; நாள் : 06.01.2019 அதற்கு முதற்படியாக வந்தவர், உரையாடும் போது:

"பிறப்பொக்கும்"

என்னும் தொடர்ச் சொல்லை எத்தனை முறை சொன்னாலும், பலரும் 'பிறப்பு ஒக்கும்' என்றே பிரித்து எழுதுகின்றனர் என்றார். பாடலில் கட்டாயம் 'பிறப்பொக்கும்' என்றே எழுத வேண்டும். இல்லையானால் சீரும் தளையும் சிதையும்; உரை எழுதும் போது விளக்கத்திற்காகப் 'பிறப்பு ஒக்கும்' என எழுதலாம் என்றேன்; இதழ் "நடத்துவார்க்கு எழுத்துப் பயிற்சிப்பட்டடை ஏற்படுத்தி அதில் தேர்ந்தவர்கள் இதழர்கள் ஆயின், அதற்குத் தீர்வு கிட்ட வகையுண்டு". என்று உரையாடினோம் ;

தினமணி ஆசிரியர் கூறிய **அரிய குறள் என்னை அசைத்தது ; அசை போட வைத்தது. ஆழத்துள் புகுமளவும்** - என்னால் இயலுமளவும் புகுந்தேன். அதன் கொடைப் பதிவு இச் சிறு சுவடி ;

"வள்ளுவம், அள்ள அள்ளக் குறையா அருமணிப் புதையல்;"

"தோண்டத் தோண்ட வற்றாத ஊற்று ;"

"எடுக்க எடுக்கக் குறையா அமுத சுரபி;"

அதில், இயன்றது கொண்டது இது;

இப்படித் 'தம் சொல் தூண்டும் என்றோ, சுவடியாம் என்றோ' எண்ணியும் பாராத தினமணி ஆசிரியப் பெருந்தகையை உள்ளார்ந்த **நன்றியோடு நினைந்து,** இச்சுவடி வருநிலை ஈது என அமைகிறேன்.

திருவள்ளுவர் நிலையம்,
7, இராமன் தெரு,
திருநகர், மதுரை - 6.

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**
29.01.2019

# "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

பொய்யா மொழியாம் திருக்குறளின், **ஒரு குறளின் முன் மூன்று சீர்கள்** இவை. பெரிதும் தமிழர் அறிந்த தொடரே ;

மாந்தர் பிறப்பொக்கும் என்று திருவள்ளுவர் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்பது போலவோ, (புறநானூறு)

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்பது போலவோ, (திருமந்திரம்)

"குலமும் ஒன்றே குடியும் ஒன்றே

இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே" (கபிலரகவல்) என்பது போலவோ, இயல்பாகக் கொண்டிருக்க முடியும் ; ஆனால், **"எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்"** என்கிறார் ; **சிந்திக்காமல் ஒப்புக் கொள்ள முடியாத கருத்து இது;**

ஆனால், முந்தை ஆசிரியர் தொல்காப்பியர்,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே ;

இரண்டறி வதுவே அதனொடு நாவே ;

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே ;

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே ;

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே ;

ஆறறி வதுவே அவற்றொடு மனனே ;

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே ;

என்கிறாரே ; அதையும் தம் முடிபாகக் கூறிச் செல்லாமல்,

"நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்று முந்தை ஆய்வரையெல்லாம் ஒருங்கு குறிக்கிறாரே ;

இவ்வளவுடன் நின்றாரா?

"புல்லும் மரனும் ஓரறி வினவே ;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (1527)

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (1528)

"சிதலும் எறும்பும் மூவறி வினவே ;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே " (1529)

"நண்டும் தும்பியும் நான்கறி வினவே ;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (1530)

"மாவும் மாக்களும் ஐயறி வினவே ;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (1531)

**"மக்கள் தாமே ஆறறி வுயிரே"**

என்று ஆறுவகைப் படுத்துகிறாரே ;

தொல்காப்பியர் வழியில் முப்பாலும், குறள்யாப்பும், இல்லறமும், துறவும், பொருளும் காமமும் பாடியவர் திருவள்ளுவர். இவ்வறுவகைப் பிறப்பை அறியாதவரா அவர்! **அறியாமல் கூறினார் எனில் , நம் அறியாமையைக் காட்டுவது அல்லாமல் அவரைக் காட்டாதே ;**

கடற்கரையில் உலாவச் சென்றால், சிப்பி கிடக்கும் , நண்டு ஊரும் ; அலை ஓலமிடும் ; இரவுப் பொழுதானால் ஆமை, மணல் பரப்பில் தோன்றும் ;

மீன் பிடிக்கச் சென்றால், வலையில் அகப்பட்டதைக் கொண்டு வரலாம்.

முத்துக் குளிப்பார், பவழப் பாறை காண்பார் கொண்டு வருவதைக், கரையோரம் சென்றவரோ, மீன் பிடிக்கச் சென்றவரோ கொண்டு வர முடியுமா?

முடியாமையால், "கடலில் முத்தும் பவழமும் உண்டு"

என்று கண்டு வந்தவர் – கொண்டு வந்தவர் – சொல்லியும் காட்டியும் – நாம் "நம்ப முடியாது" என்பது ஆய்வொடு தகுமா?

கலப்பையின் கொழுத் தேயக் கல்லாஞ் சரளையில் **குவளால புரமாம் கோலாரில்** – உழுதவன் உழுது கொண்டிருக்க உள்ளே ஆறாயிரம் அடிக்குக் கீழும், ஒன்பதாயிரம் அடிக்குக் கீழும் – தென்வடலாகத் **தங்கப்பாறை** உள்ளதைக் கண்டறிந்து சுரங்க மிட்டுக் கொண்டுவந்தான் அல்லவா!

**'முதற் குறள் உவமை'** என அறிஞர் **கு.கோதண்ட பாணியார்** இருநூற்று முப்பது பக்க அளவு எழுதினாரே ; அவர் தாமே ஓர் உவமை கூறினார் ;

**திருக்குறள் பளிக்கு நீர்ப் பொய்கை. அது, இரண்டடியாகக் காட்டி,**

**ஈராயிரம் அடிகளுக்கு ஆழ்ந்து செல்கிறது என்று ;**

நாமே எண்ணுவோமே !

மரமும் மாந்தனும் ஒப்பா ?

மீனும் மானும் ஒப்பா?

எலியும், புலியும் ; பூனையும் யானையும் ஒப்பவையா?

நண்டும் வண்டும்; அயிரையும் சுறாவும் ; கோழியும் பருந்தும்

ஒப்பவையா?

கான மயிலும் வான் கோழியும் ஒப்பில்லை என்கிறதே ஒரு பாடல் !

மண் புழுவும், நத்தையும், பாம்பும், ஓணானும், அணிலும்

முயலும் ஒப்பவையாமா?

மரம் செடி கொடிகள், வித்தில் பிறக்கின்றன. இன்னும், விந்தில் பிறப்பது, முட்டையில் பிறப்பது, குஞ்சாகக், குட்டியாக, மகவாகப் பிறப்பவை

எல்லாம் ஒப்பானவையா?

நீரில் வாழ்வன. நிலத்தில் வாழ்வன. மரத்தில் வாழ்வன

இருளில் வாழ்வன, எலும்பு உள்ளவை, எலும்பு இல்லாதவை,

நாற்காலில் நடப்பன, இருகாலில் நடப்பன, ஆயிரம் காலால் நடப்பன,

எல்லாம் ஒப்பவையா?

மலைக்குடைவு, பொந்து, புடை, புழை, வளை, கூடு, வீடு

என எத்தனை வாழ்விடங்கள்? இவை ஒப்பனவா?

நீரால் வளர்வது, மண்ணுண்டு வாழ்வது, புழுப்பூச்சி உண்டு வாழ்வது,

குருதி குடித்து வாழ்வது, ஊனுண்டு வாழ்வது, ஊன் வாடையே ஒவ்வாதது. இவ்வாறு உணவால் ஒப்பனவா?

ஆடு மாடு தின்னாச் செடி, பூவாமல் காய்ப்பது, பூத்தும் காயாதது, மணக்கும் மலர், மணவா மலர் , நிலைத்திணையில் எத்தனை வகை?

கோயில் வழிபாட்டுக்கு, சூடுதற்கு உரிய பூ, காய்ப்பதில்லை.

காய்தரும் பூ , வழிபாட்டுக்கோ, சூட்டுவதற்கோ கொள்ளப்படுவதில்லை.

ஒவ்வோர் உயிரிகளிலும் உள்ள வகைகளையெல்லாம் கண்டு விட்டோமா? மூலிகை அகராதியில், மூலிகைகள் அடங்கி விட்டனவா? வினாவி வினாவி என்ன கண்டோம், **'விடை காணாமை'** கண்டோம் ;

நுண்மாண் நுழைபுல வள்ளுவர் பெருமான், **'பொய்யா மொழியார்** ; அவருரை **'பொருளுரை '** ஆதலால் , அவர் கூறியவாறு , 'செம்பொருள்' காண வேண்டும்;

**"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**

**செம்பொருள் காண்ப தறிவு"**

என்பதைப் பற்றுக் கோடாகக் கொண்டு **ஆய்ந்தும், ஆராய்ந்தும் அறிவியலாளன் கூர்ப்பில் மூழ்க வேண்டும் ;**

எளிய யான் எவ்வளவு மூழ்க முடியும் !

முடிந்த அளவும் மூழ்காமல் , 'முடியாது' என்றால் கரையை ஒட்டிக் கால் வைக்காமல் ஒதுங்கிவிட வேண்டும்' ; வள்ளுவத்தில் குறைகாணாதாவது வாயை மூடிக் கொள்ள வேண்டும் ;

ஓரறிவு உயிரியின் பிறப்பு மூலம் எது? பூ !

பூவில் ஆண் பூ , பெண் பூ என வகைப்பாடு இல்லையா?

இது காயா மரம், இது காய்க்கும் மரம் எனப்பாகுபாடு இல்லையா?

"காயா மரம், கருங்காலி" என்பது பன்னீரடியான் வந்த பஃறொடை

வெண்பா; "தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி இரண்டிலும் மேற் கோளாக வந்த பாட்டு.

"சிற்றியாறு பாய்ந்தாடும் சேயிழாய்"

என்னும் பாட்டு;

பப்பாளியில் இது, ஆண், பெண் எனப் பூவைக் கண்டே முடிவு

செய்து விடலாமே ;

ஈக்களில் ஆண் ஈ , பெண் ஈ இல்லையா?

ப்றவை, கூடு ஏன் கட்டுகிறது? கூடும் கூடும் கூட,

'கூடு' வேண்டும் ; அதற்குச் சங்கச் சான்றோன் தங்கப் பெயர் சூட்டினான் ; பறவைகள் தங்கச் செய்தது மட்டுமா, அக்கூடு! இல்லை! 'ஈன் இல்' இழைக்கும்! முட்டையிட - குஞ்சுபொரிக்க - இனத்தைப் பெருக்கச் செய்த இயற்கை இயங்கியலை இயல்பாகக் காட்டிய வழிமுறை !

கூடுகள் தாம் எத்தனை?

"வான் குருவி யின் கூடு வல்லரக்கு தொல்கறையான்

தேன் சிலம்பி "

எனக் கூடுகளை அடுக்குகிறதே ஒரு தனிப்பாடல்.

ஓர் ஊருணிப்பக்கம்! ஈரப்படிவு;

கூண்டு வண்டி ஒன்று அசை நடையிட்டு வருவது போல ஒரு **நத்தை!**

அதைக் கண்டு, அதன் முன்னே நோக்கினால் அதே போல ஒரு நத்தை நகர்ந்து வருகிறது.

இரண்டன் உணர்வுக் குழல்களும் நன்றாக நிமிர்ந்து நிற்கின்றன. ஓர் அடி இடைவெளி! யான் அதனை நோக்கியே நிற்க, ஒவ்வொன்றன் அசை நிலையும் ஒவ்வொன்றையும் நோக்கியே செல்ல ஓர் **அரைமணிப்பொழுது** ஆயது. நெருங்கிய அவை அரைவட்டக் குமிழ்வடிவு - மற்றோர் அரைவட்டக் குமிழ் வடிவு - இரண்டும் இணைந்தன. அருமையான முழுவட்டக்குமிழ்!

வியப்பானால் வியப்பு - என் எண்ணத்துச் சங்கச் சான்றோன் புகுந்தான்!

ஓர் உயிரைப் பகுத்துவைத்தால் போன்ற காதல் தலைவன் தலைவி! ஆம்! **"உயிர்பகுத்தன்ன இனியோள்"** என்பதை மெய்ப்பித்துக் காட்டின!

ஆண் பூ, பெண் பூ; ஆண் மரம், பெண்மரம்;

ஆண் ஈ, பெண் ஈ; ஆண் நத்தை பெண் நத்தை!

ஆசிரியர் தொல்காப்பியர் கண்ணசைத்தார்!

**"என் மரபியலைப் பார்; உனக்குப் புரியும்"** என்றார்.

முதல் நூற்பா! முதன்மை நூற்பாவே! தொடக்கமே எப்படி?

**"மாற்றரும் சிறப்பின் மரபு"**

மாற்றரும் சிறப்பின் மரபு; எது? மூன்று நூற்பா தொடர்கிறார் :

"மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று
ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே" (1500)

பார்ப்பு, பறழ் என்பவை எல்லாம் எப்படித் தோன்றின?

அடுத்தே,

"ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த **ஆண்பால்** பெயரென மொழிப" (1501) என்றார்.

அடுத்துக் கூறுகிறார்;

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே" (1502)

என்று கூறுகிறார்! ஒவ்வொன்றும் எவ்வெவற்றின் இளமை, ஆண்மை, பெண்மை என்பதை விரியக் கூறி,

**"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"** (1569) என்று, நிறைவு செய்கிறார்!

புல் முதல் மக்கள் ஈறாக எவ்வுயிர்ப் பிறப்பும், "ஆண், பெண் பிள்ளை" என்பவற்றின் தொடர் நிலையே என அறியச் செய்கிறார்!

எல்லா உயிரும் ஆண் பெண் கூட்டால் உருவாவனவே என்பதை உறுதிப்படுத்துகிறார்.

திருவள்ளுவர், **இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு** என முறை வைப்புச் செய்து காட்டுகிறார்!

கூறிய இவற்றால் **ஓரறிவுமுதல் ஆறறிவு உயிர் ஈறாக எல்லா உயிர்களும் ஆண்பால் பெண்பால் இணைவால்** பிறப்பவை என்பதால், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது செவ்விதே.

பிறக்கும் போது முறையாக எவ்வெப் பிறப்பு உறுப்புகளோ அவ்வவ்வுறுப்புகள் வழியன்றிப் பிற உறுப்புகளாலோ, வகைகளாலோ பிறப்பவை இல்லை என்பது கண்கூடு,

இதனால் பொய்மைப் புனைவுகள், இவை இவை என எண்ணுவார் எவரும் அறிவார்! எண்ணாதவர், **எண்ணக் கூடாது** என்றும் எண்ண விடக் கூடாது என்றும் நினைவார் தவிர்த்துப் பிறர்க்கு வெள்ளிடை மலைமேல் விளக்கென விளங்கும்!

மேலும் ஒன்று. பிறப்பு இயற்கை இயங்கியல் நிலையது; பருவ நிலையில் அரும்பி முதிர்ந்து கனிவது! ஆதலால், ஒருதாய் (விலங்கு, மாந்தர் என விலக்கின்றி) செயற்கைப் பொருளொடு மகப்பேறு உறுதல் இல்லை! அரிதாக இரட்டைப் பிள்ளைகள் **ஒட்டிப்பிறப்பது உண்டு. உறுப்புக் குறையொடு பிறப்பது உண்டு.** விரல்கள் கூடிக் குறைய, கால் கைகள் சிறு ஊறு எய்தப் பிறப்பது உண்டு. அவை தாய் வயிற்றில் பிறந்து வளரும்போது ஏற்படும் மாறுபாட்டு நிலைகளால் உண்டாவன! அவையும், இயற்கை நிலை அன்றிச் செயற்கை அன்று. பிறக்கும்போது எக்குழந்தையும் சாதி, சமயம், கட்சி, உயர்மை, கீழ்மை எனப் பிறப்பது இல்லை. பெற்றோர் அறிவு, பண்பு, இயல், செயல், மரபு நிலையால் ஏற்படுவது பிறப்பொடு வருவதால் அதனை **'மரபியல்'** என்னும், **'உண்மை அறிவு'** என்று ஆய்ந்தோர் கூறுவர். அவ்வாற்றல் எந்த நிலையிலும் அறிவால் அடக்கி வைப்பினும், உள்ளிருந்து சுரக்கும் ஊற்றுப்போல் கிளர்வதுண்டு என்பதால் வள்ளுவம்,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

என்றது. அறிவியலார் 'மரபியல்' என்பர். சிறிதும் வேறுபாடு கண்டறியா மக்களாக **இரட்டைப் பிறப்பர்** இருப்பினும், பெற்ற தாய்க்கு வேறுபாடு வெளிப்பட விளங்கவே செய்யும்! குடும்பச் **சாயலை** வழிவழி மரபுத் தன்மை, செல்வ வளம், கல்வி வளம், இருக்கும் சூழல், கொண்ட தொழில், உண்ட ஊண் என்பவற்றால் மாற்றம் தோற்றத்தில் ஏற்பட்டாலும், முற்றாக மரபியல் அழிந்து போவதில்லை என்பதைப் பல்லாயிர ஆண்டு உயிரிகளின் முந்தை நிலை கொண்டு ஆயும் அறிவியல் மெய்ப்பித்துக் கொண்டுள்ளது.

ஆதலால் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது செவ்விய முடிவாதல் தெளிவாம்.

இனி, எவ்வுயிரி எனினும் பிறக்கும் போதே, **ஒரு நோயொடு பிறக்கிறது.** அந்நோய் இறப்பு வரை இடைவிடாத் தொடராகப் பின்னிப் பிணைந்தே உள்ளது. அது, **பசிநோய்!** பசிப்பிணி! அப் பசிப் பிணி,

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாது;
இருநாள் உணவைக்கொள் என்றால் கொள்ளாது;

வறுமையா, நோயா என்னவென்றாலும் ஏதாவது தந்தாக
வேண்டும். அதனால்,
**இடும்பைகூர் என்வயிறே; உன்னோடு வாழ்தல் அரிது"**
என்றும்,
பல்லெலாம் தெரியக் காட்டி பருவரல் முகத்தில் கூட்டி
சொல்லெலாம் சொல்லி நாட்டி" இருகரம் விரித்து நீட்டி
இல்லெலாம் இரந்துண்ணவும் வைக்கின்றது!
'இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு'
என்று முன்னாளே, பின்னாளை எண்ணி ஏங்க வைக்கின்றது.
எப்பிறவிக் காவது இத்துயர் இல்லாமல் போதல் உண்டா?
கைப்பிடிக்குள் அடங்கும் மஞ்சள் குருவி!
விடிந்தது முதல் அடையும் வரை தீனி பொறுக்குகிறதே!
அப்பசிப்பிணி மருந்து எவை?
**எல்லா உயிரிக்கும் இரண்டே!**
**ஒன்று நீர்! மற்றொன்று உணவு!**
அதனாலேயே **"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**
எனப் பாடுபுகழ் பெற்றனர்.
**"பசிப்பிணி மருத்துவன்** இல்லம் அணித்தோ சேய்த்தோ
கூறுமின் எமக்கே"
எனச் சோழன் குளமுற்றத்தான், சிறுகுடி கிழான் பண்ணனைப் பாணாற்றுப்படை பாடினான்! ஆபுத்திரன், மணிமேகலையர். அமுதசுரபி ஆயினர்.

மரத்திற்கும், பயிரிகளுக்கும் பிற நிலைத்திணைகளுக்கும் நீர் போதுமே! உணவு வேண்டாவே என எண்ணலாம்! மேலும் எண்ணின் தெளிவும் பிறக்கும்!

"ஏரினும் நன்றாம் **'எருவிடுதல்'** கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"
என்று வள்ளுவ உழவக் கிழவர், பாடுகிறார் அல்லரோ!

**உரம்போட்ட பயிருக்கும் உரம்போடாமல் நீரே விட்ட பயிருக்கும் கொழுமை, வளர்ச்சி, விளைவு - வேறுபாடு இல்லையா?**

ஆட்டுக்கிடை, மாட்டுக்கிடை, வாத்து அடைப்பு, குப்பை அடிப்பு, வண்டல்மண் கொட்டல், பசுந்தாள் உரம் - என எத்தனை வகை உரங்கள்! இவை நீரா, உணவா?

**எல்லா உயிரிகளுக்கும் நீரும் உணவும் கட்டாயமானவை என்பதால் பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்பது விளக்கமாம்!**

மேலும், எந்த உயிரிக்குத் **தோற்றம், வளர்ச்சி, முதுமை, இறப்பு** என்பவை இல்லை! **ஓரறிவு உயிரி முதல் ஆறறிவு உயிரிவரை அனைத்து உயிரிகளுக்கும் பொதுமையவை தாமே இவை!**

முளையிலே அழுகுபவை, கருவிலே சிதைபவை இல்லையா?
வளரும்போது நோய்பற்றா உயிரி ஏதாவது உண்டா?
நோயில்லா உயிரி உலகில் ஏதாவது உண்டா?

**ஒருநாள் வாழ்க்கை ஈயல் இல்லையா?**
**நூற்றாண்டு கடந்து வாழும் மாந்தர் இல்லையா?**
"வாழ்நாள் வரையும் அறிஞரும் இல்லை" என்கிறதே **நற்றிணை!**
உறங்கப் போனவர் உறங்கியே போவது அறியாததா?
"நின்றான் – இருந்தான் – கிடந்தான் – கேள் அலறச் சென்றான்"
"மணமகனே பிணமகனாய், மணப்பறையே பிணப்பறையாய்
இவை நடைமுறை வாழ்வியல் உண்மைகள் தாமே!
"ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே"

என்னும் **திருமந்திரம் (145)**, வெறுமந்திரமா?

**பசியுண்டு, நோயுண்டு, மூப்புண்டு, இறப்புண்டு! ஓரறிவு உயிரி முதல் எல்லா உயிரிகளுக்கும் விலக்கில்லாதவை ஆதலால்,**

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்றது **திருக்குறள்!**

"சேக்கை மரனொழியச் சேணீங்கு புள்"

என்றது **அகநானூறு!**

மருந்து, மருத்துவம் பெருகுவதுபோல, இடுகாடும் சுடுகாடும் பெருகத்தானே செய்கின்றன!

காட்டில் போனால், பட்ட **மரம் எத்தனை?** நாறுகிறதா? ஏன் நாறவில்லை?

அவற்றுக்கு **எலும்பு, தசை, குருதி இல்லை! நாறவில்லை அதனால்!** வாழைக்காய், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு - எத்தனை நாள் இருந்தால் என்ன? நாற்றம் உண்டா?

'ஊன்' 'மீன்' - சில மணிப் பொழுதுகளில் பக்கமெல்லாம் மூக்கடைக்க நாறுகிறதே! சில சுமையுந்துகள் சென்றால் பக்கமெல்லாம் நாறவில்லையா? நிலைத்திணையாகிய **இயற்கை ஓரறிவுயிர் இறந்தால் - பட்டுப்போனால் நாறா! ஈரறிவு உயிரி முதல் நாறும்!**

நாறினும் நாறாவிடினும் இறப்பு, இறப்புத்தான்!

**முதுமையால் இறக்கும்; நோயால் இறக்கும்; ஊணின்றி இறக்கும்! தற்கொலையால், நேர்ச்சியால், பகையால் - இறக்கும்!**

**பிறப்பு உண்டானால், உண்டாகிய போதே இறப்பையும் தாங்கிக் கொண்டே வருதலால்,**

**'பிறப்பிறப்பு'**

என்னும் ஒட்டுச் சொல் உண்டாயது!

**பிறப்பு** என்னும் சொல்லின் முன்னெழுத்து,

**உயிரும் மெய்யும் (ப்+இ) கூடியது;**

**இறப்பு என்னும் சொல்லின் முன்னெழுத்து**

மெய்யை ஒழித்து, **உயிர்தனித்தாகி விட்டது!**

இயற்கை விளக்க இணைப்பு அல்லவா இவ்விணைப்பு!

இன்னும் காணலாம்:

எல்லா உயிரிகளும், "இன்பத்தை விரும்புகின்றன."

"துன்பத்தை வெறுக்கின்றன"; "சாவாமல் தப்பிப் பிழைக்க வழிவகை தேடுகின்றன!"

முகட்டில் கட்டிய உறியில் வண்டு கட்டி இருந்தாலும், மூன்றாம் அறிவுடைய எறும்புகள், அதனை நுகர வரிசை பிடிக்கின்றன; போகும் வழியில் தடை - இடர் - உண்டானால் முன் எறும்பு தான் திரும்புவதொடு, பின்வரும் எறும்புகளும் திரும்ப வழி காட்டுகின்றது!

தேனீ, இருபது கல் தொலைவு சென்றும் தேன் எடுக்கின்றது.

எக் கட்டுக் காவல் இருந்தாலும் ஆடுமாடுகள் வேலியைத் தாண்டியும் மேயப் புகுகின்றன!

ஓசை இல்லாமல் நரி, ஆட்டைப் பற்றிச் செல்கிறது!

புலியைக் கண்டதும் மான்துள்ளி ஓடுகிறது; அதனை அள்ளிகொள்ளப் புலி பாய்கிறது;

பூனை எலியை நோக்கி இருக்க, எலி பூனையைக் கண்டு அஞ்சி வளையுள் புக – வலியது வெல்கிறது! மெலியது இரையாகிறது!

வானில் பறக்கும் **பருந்து**, கோழிக் குஞ்சைப் பற்ற நொடிப் பொழுதில் கீழே இறங்குகிறது! பறக்கும் பருந்தைத் தாக்கிக் குஞ்சைக் காக்கப் பறந்தடிக்கின்றது தாய்க் **கோழி!**

பாஞ்சாலங்குறிச்சி முயல், நாயை எதிர்த்த செய்தியும்,

**உறையூர்ச் சேவற்கோழி, யானையை எதிர்த்த செய்தியும்** உயிர் காக்கும் முயற்சிகளே! ஏனெனில்,

"சாதலின் இன்னாதது இல்லை"

என்பது வள்ளுவம்.

இவற்றால் உயிரிகளின் வாழ்வியல் பொது நோக்கு,

"துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்"

என்பது **தெள்ளத் தெளிய விளங்கும்!**

உயிரிகளின் பொது நோக்கு அது என்றால், அவற்றின் பிறப்பும் சிறப்பும் அப்பொது நோக்குடைய தாக இருக்க வேண்டுமே! அப்படி உண்டா என வினவின் 'ஆம்' என்பதே விடை.

அது, எது எனின் ஐம்பூதங்களால் அமைந்தது உலகம். மண், விண், தீ, நீர், காற்று என்பவை. இவ்வைந்து பூதங்களும் ஒன்றில் இருந்து ஒன்றாக விரிந்தவை. அவை, முறையே **வெளி, வளி, ஒளி, நீர், நிலம்** என்பவை. இவை பற்றியும் தொல்காப்பியம் சொல்லவே செய்கின்றது. அது,

"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்பது. இவற்றில் நான்காவதாம் நீரில் தோன்றியவை மீன் வகை; மற்றவை ஐந்தாவதாம் நிலத்தில் தோன்றியவை.

பூதங்கள் என்பவை, **அரும்பு, முகை, மொக்கு, மலர், அலர்** என எவ்வாறு பூவிரிவது போல் விரிந்தனவோ, அவ்வாறே உயிரிகள் ஓரறிவு முதல் ஐயறிவாக விரிவுற்றன. அவற்றின்மேல் அகஉறுப்பாம் மனத்தால் விரிந்தவன் மனத்தன் – மனத்தள் ; மனித்தர்.

மாந்துதலால் – துய்த்தலால் – மாந்தன்!

படிப்படியே வளர்ந்து படிப்படியே தளர்ந்து தோன்றிய நீரிலோ நிலத்திலோ ஒடுங்கியவை ஆதலால் தோற்றமும் வளர்வும் ஒடுக்கமும் ஒப்பவை.

தோற்றம் ஒடுக்கம் ஒப்பவை என்பது புலப்படுகின்றது. வளர்நிலை புலப்படவில்லையே எனின் புலப்படுத்த வள்ளுவர் முன்னிற்கிறார்.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் **பூதங்கள்**

**ஐந்தும்** அகத்தே நகும்"

என்பதால் விளக்குகிறார்.

ஐந்தின் மேல் தனித்தல்லவோ ஆறாம் அறிவைக் கொண்டான் எனின் ஐந்தன் இயல்பை அறிந்து நாற்கால்களை, இருகால்களாய் இருகைகளாய்க் கொண்டு நிமிர்ந்தான். கூர்தல் – உள்ளது சிறத்தல் வழியாக ஏற்பட்டது. அதை எப்படி அறியலாம்;

"பொறிவாயில் ஐந்தவித்தான்"

"ஐந்தவித்தான் ஆற்றல்"

"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின் வகை"

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்"

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோள்" என அடுக்கடுக்காக – அடுக்கு – ஐந்து வள்ளுவம் கூறுகின்றதே! ஐந்தன் அளவில் மாந்தன் அமைந்தானா? அமைந்தான் அவன் எனில் தன்னலத் தனாகவே அமைவான்! உலக நலம் – உயிர் நலம் – விரிவுறல் எப்படி? மன அறிவால் – அவன் மன அறிவால் உலகுக்கு ஆவதென்ன?

"எனக்குள்ள இன்ப துன்பம் எவ்வுயிரிக்கும் உண்டு"

ஆதலால், எனக்கு இன்பமானது அவற்றுக்கும் இன்பமானது; எனக்குத் துன்பமானது அவற்றுக்கும் துன்பமானது! என்பதை உணர்தல் வேண்டும்! அது ஏழாம் அறிவு!

அறிதலால் – ஆய்ந்து தெளிவதால் என்ன பயன்?

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?"

"தேன் இனிக்கும் என்றறிந்தால் வாய்க்கு இனிக்குமா?"

அவற்றைக் கடைப்பிடித்தலும் துய்த்தலும், பிறவும் துய்க்கச் செய்தலும் அல்லவோ பயன்!

அதனால், பிற உயிரிகளின் துன்பத்தை நீக்கலும் இன்பத்தைப் பெருக்கலும் தன் கடைப்பிடியாகக் கொண்ட நேயம், எம்முயிராம் அவை என எண்ணும் அருள் நிலைக்கு ஏறவேண்டும்!

அவ்வாறு அருள் நிலைக்கு ஏறிய அருளாளர் உண்டா?

உண்டா என்ன?

தமிழ் மண்ணில் கண்காண வாழ்ந்த **அருட் பேரொளி வள்ளலார்** இருந்து வாழ்ந்து காட்டினாரே! **தம்வாழ்வால் நிலைநாட்டினாரே! பாட்டாகப் பாடிப் பறையறைந்தாரே!**

"எத்துணையும் பேதம் உறாது எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி
உள்ளே"
ஒத்துரிமை யுடையவராய்" "வாழ்வியல் காட்டினாரே!"
"மண்ணுலகத்திலே உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தைக்
கண்ணுறக் கண்டும் செவியுறக்கேட்டும் கணமும் நான்
சகித்திட மாட்டேன்"

என்றாரே!

"உயிர்தான் உயிர் இரக்கம் தான் ஒன்றலாது
இரண்டில்லை; இரக்கம் ஒருவின்
உயிர் ஒருவும்" (ஒருவின் – நீங்கின்)

என எத்தனை முழங்கினார்! நடையில் காட்டினார்! ஒன்பதாம் நிலை அந்த நிலை, நிறை நிலை! அடுத்தது இறைநிலை! பத்தாம் நிலை அந்த இறை நிலை, முழுதுறு தொண்டர் நிலை! அ.உ. அறிதல். அ–எட்டு ; உ – இரண்டு ; எட்டிரண்டும் அறிதல்! அதற்குத் தொண்டலால் துணையும் இல்லை என்னும் பேராப் பெருநிலை அடைய வேண்டும். அது செலுத்த ஒடுக்கமுறும் பேரியற்கை நிலை!

அதுவே,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்று வள்ளுவம் கூறும் நிலை!

எந்த மண்ணில் இருந்து தோற்ற முற்றோமோ, அந்த மண்ணுள் ஒடுங்குதலாம் ஒடுங்கி நிலை!

"தோற்றிய திதியே ஒடுங்கி"

என்பது சிவஞான போதம்! பூத்த கொடியின் கீழே, மென் தென்றலாய் மெல்லென உதிர்ந்து தந்த தாயின் அடிமலர் அடைதல்!

தோற்றியது எதனால்? ஒடுங்கியது அதனால்?

'தோற்றம் – வளர்வு – ஒடுக்கம்' என்னும் மூன்றும் ஒன்றன் இயக்கமாக இருந்தாக வேண்டுமே!

ஆம்! அதனைப் பரிபாடல் கூறுகிறது!

"தோற்றமும் ஒடுக்கமும் மருந்தில் உள"

என்பது.

மருந்து என்பது யாது? காற்று! காற்றில் பிறந்து, காற்றில் ஒடுங்கல்

"தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு

சுழிமாறிப் போனாலும் போச்சு" (சித்தர்)

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" (திருக்குறள்)

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு" (திருக்குறள்)

"சேக்கை மரனொழியச் சேண் நீங்குபுள்போல" (அகம்)

முன்னே கண்டவை இவை!

**காற்றிலே தோன்றிக் காற்றிலே முடிதல் ; மண்ணிலே பிறந்து மண்ணிலே ஒடுங்கல். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.**

என்பது நாளும் பொழுதும் நாம் காணும் காட்சிகளே!

வள்ளுவம் வாழ்க!

பிறப்பொக்கும் எல்லா உயிரும் வாழ்க!

❖❖❖

# “சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்”

'பிறப்பொக்கும்' என்ற வள்ளுவர், 'எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர், மாந்தரை மட்டும் பிரித்துச் 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்கிறாரே! ஏன்? (972)

மற்றை உயிரிகளுக்கு, இயற்கைத் தூண்டலால், 'அருந்துதல் பொருந்துதல்' என்னும் இரண்டால், வாழ்தலும் இனப்பெருக்கம் செய்தலும் தாமே உள்ளவை!

'கோடு வாழ் குரங்கு' என்கிறார் தொல்காப்பியர். அதனைக் கூடுவாழ் குரங்காக்கித், தான்வாங்கும் பிச்சைக்குப் பயன்படுத்தல்- ஆட ஓட வைத்தல்-மாந்தப் பிறப்பர் தாமே!

ஆடு மாடுகள் காடுவாழ்பவை தாமே! உழவுக்கும் அதன்சார் தொழிலுக்கும் அது அதுவாகவா (ஆடும், மாடும்) வந்தன அம்மாட்டைக்

'கோயில் மாடு' ஆக்கியதும் தலையாட்ட வைத்ததும், மாந்தப் பிறவி தானே!

காட்டு யானையைப் பழக்கி, மரம் இழுக்க வைத்ததும், கோயில் யானை ஆக்கியதும், சுற்றுலா ஊர்தியாக்கியதும். போருக்குப் பழக்கியதும், விலைமான மிக்க தந்தத்துக்காகக் கொல்லுவதும் அதன் வாழ்விடத்தையும் கவர்ந்து நீர் உணவு முதலிய தட்டுப்பாடுகளை ஆக்கியதும், ஊருக்குள் வரவைத்ததும், வளையக்காட்சியில் யானை, குதிரை, புலி, அரிமா முதலியவற்றைக் காட்சியாக்கியதும், கிளியைப் பற்றிக் கூண்டில் அடைத்ததும் மாந்தப் பிறவி தாமே!

அவையாகச் செய்யும் வேலை என்ன? செய்தொழில் வேற்றுமை அவற்றுக்கு இல்லாமையால், மாந்தரை மட்டுமே சுட்டுவதாயிற்று! வள்ளுவர் அறிவு, “நுண் மாண் நுழைவு”டையது! ஆயிரம் ஆயிரம் முறை எண்ணி இயற்றியது: அத்தகைய அரிய படைப்பில், குறை காணல், குறைகாண்பார் குறையன்றி வள்ளுவர் குறை ஆகாதாம். ஒருவீட்டுப் பிள்ளைப்பிறவி பெண்! ஒருவன் மனையாளாய், ஒருவீட்டுக்கு வர வளர்ந்தவள். வந்த வீட்டில் பெற்றுப் பெருக்கி, முற்படு தெய்வப்பிறவியாகத் திகழ்பவள். அவள் செய்யும் வேலைகள் எவை எவை? வந்த வீட்டைச் சொந்த வீடு ஆக்குவதால் இல்லாள், மனைவி, தலைவி,தாய் , பாட்டி எனப் பல் வளப்

பெருமை அடைகிறாள். சமைத்தல், படைத்தல், கூட்டல், கழுவல், துடைத்தல், அழகுறுத்தல் எனக்குடும்பப் பணிகள் பலவும் செய்கிறாள். முற்றம் தெளித்துக் கோலம் போடுகிறாள்: முதியரைப் பேணுகிறாள்; விருந்தோம்புகிறாள்: படித்துப் பணி செய்பவள் என்றாலும், இவற்றைச் செய்கிறாள். அவள் தாயாகும் நிலையில் படும் துயர் சொல்லி முடியுமா? பிள்ளை பிறந்தாலும் **ஊட்டுதாய், ஆட்டுதாய், அமர்த்தும் தாய்,** என மாறுகிறாள். குழந்தை கழிப்பதைச் சுழிக்காமல் எடுக்கிறாள்: ஒழுங்குறுத்துகிறாள்: **எல்லாத் தொழிலும் ஒத்த தொழிலாக எண்ணியே செய்கிறாள்: இத்தொழில் உயர்வு , இத்தொழில் தாழ்வு , இத்தொழில் பெருமை இத்தொழில் சிறுமை என அவள் எண்ணுவதில்லை:** அவ்வாறாக, அவள் **தாய்த்தெய்வமாகத் திகழ்வதை அல்லால்,** அவள்செய்யும் தொழிலை உயர்வானது தாழ்வானது என, **மாந்தப்பிறவியாகப் பிறந்தவர்** எவரும் நினைவது இல்லை: அவ்வாறாகத் **தெய்வப்புலவர் எத்தொழிலையாவது பெருமையானது சிறுமையானது என எண்ணுவாரா?**

நாடு விழிப்புற்ற காலத்தில்,

"உழவுக்கும் தொழிக்கும் வந்தனை செய்வோம்"

என்று பாடியவர் அல்லர் **திருவள்ளுவர்!** உயர்வு தாழ்வு, சாதி, சமயம், பிணக்குக் காலத்தவர் அல்லர்! அவர் பார்வை, **மனமாசிலா மாண்பார்வை !**

பொன் **வணிகனார்**

**இளந் தச்சனார்**

பெருந் **தச்சனார்**

**கொற்றனார்**

பெருங்கொற்றனார்

**கூத்தனார்**

**கணக்காயனார்**

பெருங்**கொல்லனார்**

**குயத்தியார்**

**எயினனார்**

**எயினியார்**

**மள்ளனார்**

**எயிற்றியார்**

**இளம்பாலாசிரியனார்**

**மருத்துவனார்**

**இவர்கள் சங்கச் சான்றோர்கள்**

ஆண் பெண் என்னும் பால்வகை உயர்வு தாழ்வோ,

**தொழில் வகை உயர்வு தாழ்வோ** உள்ளனவா! கால நிலையே அவ்வாறிருக்க, தொழிலில் உயர்வு காணும் சழக்கர் நோக்கொடு நோக்கியவரா 'கிழவன் கிழத்தி ' எனக் கண்டவர்! அவர் , **உழவரை,**" உலகத்தார்க்கு ஆணி" என்கிறாரே!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்கிறாரே!

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்கிறாரே!

"உழவினார் கைம்மடங்கில் பற்றற்ற துறவரும் வாழார் " என்கிறாரே!

உழவரோடு அவ்வுழவுத் தொழில் சார்ந்த தொழிலரை எல்லாம்

**"கை செய்தூண் மாலையவர்"** என்று அவர் வழிமுறைக்கே வாழ்த்துக் கூறுகிறாரே!

அவர் காலத்தில் சிலரை உயர்வாகவும் தாழ்வாகவும், பதவி, செல்வம் பற்றி நினைவாரை நோக்கி,

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் ; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" .

என்ற அளவில் நில்லாமல்,

**"அறத்தாறு இதுவென வேண்டா;** சிவிகை
"பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

"பொருட்செல்வம் , **பூரியார் கண்ணும் உள"**

என்று விளக்கமும் தருகிறாரே!

இன்னும்,

**"மக்களே போல்வர் கயவர்"**
**உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்"**

என்றும் விளக்குகிறாரே:

"செயற்கரிய செய்வார் பெரியார்" என்றவர்
சிறியர் செயற்கரிய செய்கலா தார்"

என்பதில் '**சின்ன செயல் செய்வார்**' என்றாரா?

எச் செயல் எனினும், 'அரிய செயல்' என்னும் பொதுமையது தானே!

இதற்குமேல் தெரிவிக்க முடியாது என்பதுபோல்,

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமே கட்டளைக் கல்"**

என்கிறாரே!

தங்கத்தின் மாற்றுக் காண 'அரக்குக்கல்' உண்டல்லவா ; அதில் தங்கத்தை உராய்ந்து பார்த்து அறியும், 'நோட்டகர்' 'இத்தனை மாற்று' என்று சொல்லிவிடுகிறாரே!

**தங்கம் கொண்டு வந்தவர் தகுதி மதிப்பீடா?**

**தங்கத்தின் தகுதி மதிப்பீடா?**

பழநாளில் **ஆணிப்பொன், ஆணிமுத்து** என்பவை இருந்தன. அவ்வாணிப் பதிவு இருந்தால், கலப்படமில்லாத் தங்கம் என்றும் முத்து என்றும் கொண்டனர். **அவரவர் கருமமே - செயலே - கட்டளைக்கல்** என்றாரே அன்றி, **செய்பவரைச் சொன்னார்** அல்லரே: சின்னசெயல் என்றார்அல்லரே! பட்டம் பெற்றவர் எல்லாரும் **பட்டத்துக்குத் தக்கவர் தாமா?**

பதவி பெற்றவர் எல்லாரும் , **பதவிக்குத் தக்கவர் தாமா?**

பட்டத்தையோ பதவியையோ பாராமல் **செய்யும் திறனை வைத்து** வேலை தந்து, செய்த வேலை அளவுக்கும் தன்மைக்கும் தகச் சம்பளம் தருதல் மேலை நாடுகள் வாடிக்கையாகக் கொண்டுளவே ; உயரிய கண்டு பிடிப்பாளர்கள் எல்லாரும், **உயர்பட்டம் பெற்றவரா?** கல்லூரியுள் கால் வைக்காதவர்கள், எத்தனைபேர்கள் எத்தனை எத்தனை அரிய படைப்புகளை உலகுக்குத் தந்துள்ளனர்;

அலுவலகங்கள் சிலவற்றில் மேல் அதிகாரிகளுக்கு இல்லாத பெருமை, **எழுத்தர், ஏவலர்** என்பார்க்கு உள்ளது ஏன்?

**வள்ளலார் பள்ளியில் என்ன படித்தார்?** எழுத்தளவு தானே! ஆனால், அவர் படியாதவரா?

திருக்குறள், திருவாசகம், தேவாரம் என அவர் கற்றவை எத்தனை ? **தொல்காப்பியம்** என்னும் பெயர்தானும் அறியாத கல்வியாளர் இருந்த நாளில், **தொண்டை மண்டலச் சதகத்தில் தொல்காப்பிய மேற்கோள் காட்டுகிறாரே;** வள்ளுவர் கூறும் **ஒருமுகப்பட்ட கல்விச் சிறப்பை,**

"**நான் படிக்கும் போது என்னை நானறியேன்** நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான் படிக்கும் **அனுபவம்காண்**"

என்கிறாரே ;

"**கற்றனம் என்று களியற்க** " என்றும்

"**கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு**" என்றும்

"**அறிதோ றறியாமை** " என்றும் முழங்கவில்லையா, பல்ல பலர் :

கற்றவரெல்லாம் கற்ற **அடையாளம் காட்டினரா?**

பூ மலர்ந்தாலும் மணம் பரப்பாப் பூ இல்லையா?

"இணரூழ்த்தும் நாறா மலரனையர், கற்றது
உணர விரிந்துரையா தார்"

என்கிறதே வள்ளுவம்;

"கேட்பினும் கேளாத் தகையராம் செவியர் உண்டு" என்கிறாரே;

எடுத்தபணியை முடிக்காமல் இடையே விட்டவர் எத்தனை பேர்?

அவர் செயல் வீறு உடையவர் தாமா?

'வினைக் குறையர்(செயலில் குறைவைப்பவர்) சீரழிவர்: சோம்பர், கேடர் என்கிறாரே:

**என்ன வினை?**

**அவர் எடுத்துச் செய்யும் வினை ;**

அப்படி அரை குறைச் செயலினரை மடியர் (சோம்பர்)என்கிறாரே ;

அவர் மடியுமுன், **அவர்குடி முந்து மடியும்** என்கிறாரே வள்ளுவர். மேலும்,

"மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்"

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
**கெடுநீரார் காமக் கலன்"**

என நான்கையும் (காலநீட்டிப்பு, மறதி, சோம்பல், நெட்டுறக்கம்) அணியாகக் கொண்டவர்–அணியரா? பிணியரா? "கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்பது தானே ; "வினைமுடித்தன்ன இனியவள்" என்கிறானே ஒரு தலைவன் தன் மனைவியை!

**மருத்துவம்** உயர்ந்த தொழிலானால், எல்லா மருத்துவரும் மதிக்கப்படுகின்றனரா? **பொறிஞர்** தொழில் சிறப்பானால், எல்லாம் பொறிஞர்களும் போற்றப்படுகின்றனரா? எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்று, ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒத்த மதிப்பா?

தொழில் ஒத்த தொழில் தானே ; மதிப்பு ஒப்பாக இல்லையே ;

இல்வாழ்க்கைக்கு ஓர் அருமையான பெயர் ; இல்லறம் ;

துறவு வாழ்வுக்கும் அவ்வாறே அருமையான பெயர் துறவறம்;

இல்லறம் என்றால் கட்டாயம் 'கணவன் மனைவி' இருப்பர். இல்லையானால் தனியாள் தானே ;

இல்லறத்திலே யாவது கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்த சிறப்பு உண்டா ?

பிற்கால ஔவையார் ஒருகுடும்பப் பெண்ணைப் பார்த்தார் ; அவள் கணவனைப் பார்த்தார், ஒத்தவர்களாகத் தோன்றவில்லை ; அவள் அவ்வளவு உயர்ந்தவள் ; அவளுக்கு வாய்த்தவன் அவ்வளவு கழிசடை ; அவர் கேட்ட கதையை அப்பாட்டில் வைத்துப் பாடினார். நான்முகனுக்கு, ஐந்துதலை இருந்ததாம்; சிவன் தலையும் ஐந்தாம்; உமையம்மை சொன்னதைக்கேட்டு அவன் நடுத்தலையைக் கிள்ளி எடுத்து விட்டானாம் சிவன். அதனால் ஐம்முகன் நான்முகன்

ஆகிவிட்டானாம்;

"அற்ற தலைபோக அறாத தலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ – வற்றல்
மரமனையா னுக்கிந்த மானை வகுத்திட்ட
**பிரமனையான் காணப் பெறின்"**

என்று பாடினாராம் ; ஈவு இரக்கமில்லாதவன் – ' **பட்ட மரம்**' போன்றவன்.

அவளோ **'மான்'** போன்றவள் ;

இன்னொரு குடும்பத்தைப் பார்க்கிறார்; அவன் நல்லவன் அவள் கொடுமையானவள்; அதையும் பாடினார்;

"சண்டாளி சூர்ப்பநகை தாடகைபோல் வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே–தொண்டா
செருப்படிதான் செல்லாநின் செல்வமென் செல்வம்?
**நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்";**

என்று பாடி அவனுக்கு ஒரு வழியும் காட்டினாராம்;

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி இருக்கலாம்–சற்றேனும்
ஏறுமா றாக நடப்பாளே யாமாகில்
கூறாமல் சந்நியாசம் கொள்"

என்பது அது. இவை தனிப்பாடல் திரட்டில் உள்ளவை.

வள்ளுவம் சொல்லாமல் இல்லை. அவர் இயல்புப்படி கதை திரிக்காமல் சொன்னார்:

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் ; உள்ளதென்**
இல்லவள் மாணாக் கடை"

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
**புத்தேளிர் வாழும் உலகு"**

"வாழ்வார்க்கு **வானம் பயந்தற்றால்** வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"

என்றார். நல்லமனைவி வாய்த்தால் எக்குறையும் குடும்பத்துக்கு இல்லை. நல்ல மனைவி வாய்க்க வில்லையானால் , என்ன வளம் இருந்தாலும் குடும்பத்துக்கு எந்த நலமும் இல்லை ;

நல்ல மனைவி நல்ல கணவனைப் பெற்றால், அதுதான் வீடு பெற்று இன்ப உலகம் பெற்றதாம்.

நல்ல மனைவி வாய்த்தால், உழுது விதைபோட்ட உழவன் வானத்தைப் பார்த்த அளவில் பெய்யும் மழை போல் வளம் சுரப்பதாம் என்பவை முறையே இக்குறள்களின் பொருள்களாம்.

குடும்ப நிறைவுக்கு அவரும் ஒரு வழிகாட்டினார். நல்ல மனைவி வாய்த்தால் அவள் இயல் செயல் போலக் கணவன் நடந்தால், குடும்பத்துக்கு மிக்க பெருமையாம் என்பது அது. "ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" என்பது.

இவ்வளவு விளக்கினாலும், **"செய்தொழில் வேற்றுமையால் சிறப்பொவ்வா" என்பது உறுதிப்படவில்லையே ;**

ஆம் ; உண்மைதான் ; ஒரு **சிறு கொண்டு கூட்டு வைத்துள்ளார்** திருவள்ளுவர். **அந்தக் கொண்டு கூட்டு அவர் வைத்த விளக்கு:**

அது **'செய்தொழில்'** என்பதைத் **தொழில் செய்** என மாறிக் கூட்ட வேண்டும் என்பதே ;

**தொழில் செய் வேற்றுமையால், சிறப்பு ஒவ்வா ; தொழில் ஒக்கும் ; செய்நிலை ஒவ்வா. எப்படியோ பாரதியார் ஒரு சான்று தந்தார்:**

"வையகம் காப்பவ ரேனும் – சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
**பொய்யகலத் தொழில் செய்தே – புவி**
**போற்றிட வாழ்பவர் மேலோர்"**

என்றார். வேறொரு சான்றும் காட்டினார்:
நாட்டைப் பணயம் வைத்துச் சூதாடிய தருமனை,

"ஆயிரங்களான நீதியவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான்";
***சீசீ* சிறியர் செய்கை செய்தான்"**

என்று பாடினார்! **"நாட்டு மாந்தரை யெல்லாம் ஆட்டுமந்தையாய் உலகை ஆள்பவர் எண்ணி விட்டார்;** என்று கூறி,

**"ஓரஞ் செய்தி டாமே – தருமத்**
**துறுதி கொன்றிடாமே**
**சோரஞ் செய்தி டாமே – பிறரைத்**
**துயரில் வீழ்த்தி டாமே**
**ஊரை ஆளும் முறைமை – உலகில்**
**ஓர்புறத்து மில்லை"**

என்று அப்பகுதியை நிறைவு செய்கிறார்

**"தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை ;**
**தொழிலைச் செய்யும் முறையில்தான் உயர்வுதாழ்வு ; ஆதலால்,**
**பிறப்பு ஒப்புப் போலவே , தொழிலும் ஒப்பானவையேயாம்"**

என்பது **வள்ளுவப் பார்வையாம் ;**

நாட்டின், அரசின், தடித்தனக் கொடியரின், கொள்ளையரில் கொள்ளையராய் நாட்டைக் கெடுக்கும் நச்சாலைத் தொழிலரின், கல்விக் கொள்ளையரின், ஒட்டு மொத்தமாக நாட்டையே அடைவுபோடும் நஞ்சநெஞ்சரின் அடாவடிச் செயல்களைக் கண்டும் – ஒத்துப் போயும் – பங்கு கொண்டும் இருக்கும் நிலையில், **அறிவரும் மக்களும் ஒன்றுபட்டுத் தடுத்து நிறுத்தல் இன்றி ஒட்டுமொத்தமாக வாய்மூடி இருந்தால், அவர்கள் "நெட்டை மரங்கள் "; பட்டமரங்கள் கண்மூடிக் கிடப்பவர் " பாதகப் பாதகப் பாதகர்" – அருட்கண் அழிவு எய்திய பாதகப் பாதகப் பாதகன் என்று பாஞ்சாலி சபதத்தை முடிக்கிறார் பாரதியார் ; அப்பாதகன் யாவன் ? திருதராட்டிரன் ;**

"செய்யும் தொழிலே தெய்வம்" என்றால், அவர்கள் செய்யும் எல்லாத் தொழிலும் தாமே ; களவு கொலை கொள்ளை? அவை செய்யும் தொழில்களா? அவர்கள் பிறக்கும் போதே அத்தகையராகப் பிறந்தவரா ? செய்திக்கு வரலாம்;

**ஒருநாள் சமையலாள் வரவில்லை என்றால்?**
**ஒருநாள் காவற்காரர் வரவில்லை என்றால்?**
**ஒருமணிப்பொழுது ஒரு மருத்துவர் இல்லை என்றால்?**
**விளைவு ஒன்றன்மேல் ஒன்று மிகுதியா குறைவா?**

ஒரு நாள் கடையடைப்பு :-
ஒருவாரம் ஆலை அடைப்பு ! ஆனால்,
அதுவே **மின்வேலை** என்றால் ; **போக்கு வரவு எல்லாமும்**, என்றால்;
**ஊரை – நகரை** –மாநகரை – **தூய்மைப் படுத்தும் தொண்டர்** பெருமக்கள் **ஒருவாரம் வேலை நிறுத்தம் என்றால்** – சிற்றூர்களை விடுக – பேரூர்களைத் தள்ளுக; நகரங்களை – மாநகரங்களைக் காணப் பொறுக்குமா, தாங்குமா?
**நகரங்கள் எல்லாம் கண்ணுறக் காட்டும் நரகங்கள் தாமே ;**

உழவுக்கும் தொழிலுக்கும் உதவாமல், பல கோடி செலவிட்டுக்
காடுவாழ் விலங்குக்கும் விலங்கனாக – வில்லங்கனாக –
வாழ்வானுக்கு – முன்னிற்கும் அரசு, மக்கள் அரசா? மாக்கள் அரசா?

**ஆண்டவன்** என்பது என்ன? ஆட்சிபுரிந்தவன்! இறந்தான் ; **ஆண்டவன்** என இறந்தகாலத்தவனானான் ; இறைவனாகச் சமயத்தரால் ஆக்கப்பட்டான் ; ஆள்கிறவன் – நிகழ்காலம் ; ஆள்வான் – எதிர்காலம்

ஆண்டவன் – மாண்டாலும் , மாண்டவனாக இருந்ததால் தானே
'ஆண்டவன்' எனக் கொண்டனர் ; ஆண்டவன் நிலையில்,
யான் உள்ளேன் – அதை எண்ணி ஆள்வேன் என்று எண்ணி,
ஆள்வானே ஆனால், **இறைமாட்சியனாய்,**

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
**இறை**என்று வைக்கப் படும்". (388)

என்று **இறைநிலையன்** ஆவன் என்பது வள்ளுவம்.

ஆள்பவன் அன்றி வாழ்பவர் அந்நிலையில் ஆகமுடியாதா? **வாழ்பவனால் தானே, ஆள்பவன் ஆனான்;**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்பது இல்வாழ்க்கை நிறைவுக்குறள்;

"மனத்துக்கண் மாசின்மை " என்பதே 'அறம்'. வள்ளுவ உயிர்ப்பு ;

**மாசிலாச் செயல் எவையும் ஒப்பானவையே ;**

வாய்மை இலக்கணமே, **புரைதீர்ந்த நன்மை** என்றதல்லவோ அது;

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" என்றும்,(656)

**"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
மாணாசெய் யாமை தலை" என்றும், (317)

கூறிய **பொருளில் மருளுரை காணல் தகவாமா?**

**சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்** என்னும்; இவ்வாய்வு வரையறையாக முடிந்ததா எனின் ஒரு சான்று:

அமெரிக்க நாட்டில் ஒரு பெருமகார்க்கு, இருமக்கள். அவர்களுள் ஒருமகன் துருமன் அவன் வெள்ளை மாளிகையில் தலைவனாக இருந்தான். அத்தாயிடம் ஓரம்மையார் வந்து, நீங்கள் பேறு பெற்றவர்கள் உங்கள் மகன் வெள்ளை மாளிகையில் உள்ளார் என்றார். அந்த அம்மையார் சொன்னார் "இல்லை ; அவனிலும் சிறந்தவன் அதோ உழுகின்றான்" என்றார் ;

இராம காதை பாடிய கம்பன், ஏர் எழுபதும், திருக்கை வழக்கமும் பாடினானே!

'செங்கோல் பாடிய கிழவர் வள்ளுவர்,

ஏர்க்கோல் பாடி, உலகத்தார்க்கெல்லாம் 'ஆணி',

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றும் கூறினாரே ;

அவர்தாமே, 'இரவார்' 'இரப்பார்க்கு ஒன்றீவர்' என்ற உழவர் தாமும் அச் சிறப்பினராகப் பண முதலைகளும் கொள்ளையரசுகளும் விட்டனவா?

உழவரும், உழவராம் பெருமிதம் உடையராக விளங்குகின்றனரா?

வரிசையில் நிற்கின்றனரே இலவயத்திற்கு; "இலவயம் வேண்டா ; மதுவை ஒழி ; கல்வி -மருத்துவம் , வேலை தா" - "என உதறி, உறுதிவீறு காட்ட முடிந்ததா ? முடிந்தால், முடிவு தெளிவாகிவிடும்!

மேலும், ஐயம் அகற்ற வள்ளுவரே முன்னிற்கிறார்!

எந்த வேலை என்றால் என்ன? வேலையைச்
செப்பமாகச் செய்கிறாரா, அவர் தவம் செய்வார்!

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்"

"செவ்விதில் செய்யும் செயலெல்லாமும் தவமே"


என்றால். உயர்வென்ன? தாழ்வென்ன?

மூளையர் பார்வையில் வேறாகலாம்! நெஞ்சர் பார்வையில் – ஆன்மநேயர் பார்வையில் தொழில்களும் ஒப்பே யாம்!

வாழிய நலனே ; வாழிய நிலனே ;

❖❖❖

# சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்



ஒரு சிறு கொண்டு கூட்டு வைத்துள்ளார் திருவள்ளுவர். அந்தக் கொண்டு கூட்டு அவர் வைத்த விளக்கு;

அது செய்தொழில் என்பதைத் தொழில் செய் என மாறிக் கூட்ட வேண்டும் என்பதே ;

தொழில் செய் வேற்றுமையால், சிறப்பு ஒவ்வா ; தொழில் ஒக்கும்; செய்நிலை ஒவ்வா.

தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை ;

தொழிலைச் செய்யும் முறையில் தான் உயர்வு தாழ்வு; ஆதலால்,

பிறப்பு ஒப்புப் போலவே, தொழிலும் ஒப்பானவையேயாம் என்பது வள்ளுவப் பார்வையாம்;